திரு. வை. பாலசுந்தரம் : குடிதண்ணீர்ப் பிரச்சினை எல்லாக் கிராமங்களுக்கும் பொருந்தியிருக்கும் காரணத்தால் மின்னொளி வழங்குவதில் க்ராஷ் ப்ரோக்ராம் வைத்துச் செயல்பட்டதுபோல் குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை இப்போது தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ 90 நகராட்சி மன்றங்களில் இன்னும் பத்து நகராட்சி மன்றங்கள்தான் பாக்கி இருக்கின்றன என்று சொல்லும் அளவுக்கு நம்முடைய தீவிரமான குடிநீர்த் திட்டத்தின் மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் மின்னொளியை எப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் வழங்க வேண்டுமென்று திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவேற்றினோமோ அதைப் போல் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை எல்லாக் கிராமங்களுக்கும் வழங்க தீவிரமான திட்டம் செயல்பட்டு எந்த ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முடிவடைய வேண்டுமென்று அறிவித்து அரசின் சார்பில் கூறப்படும்.

Technical Examinations.

*63. Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state.

(*a*) whether the system of special permission given to Commercial Institutes to present candidates for examination has been given up by he Director of Technical Education from 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தட்டச்சுத் தேர்வில் இதுவரையில் பயிற்சிக்கூட மாணவர்களுக்குய கொடுத்து வந்த சலுகையான, கல்வித் தகுதி, நிபந்தனை முதலி) வைகள் நேரிடை மாணவர்களுக்கும் (**Private Candidates** அளிக்கப்பட்டுள்ளன.

மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்கள்.

* 64 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்குத் திருமணத்திற்காக வழங்கப்படும்கடன் தொகையைப்போல எய்டட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறதா ?

1972 டிசம்பர் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 500 மேற்படாதபடி திருமணக் கடன் வழங்கப் படுகின்றது.

திரு. என். கிட்டப்பா : அரசு ஊழியர்களுக்குத் திருமணங்களுக்கு வழங்கும் கடன் தொகைபோல் எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கும் கடன் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் எல்லாச் சலுகைகளுமே எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாவிதமான சலுகைகளும் அளிப்பதற்கில்லை. எந்தெந்தச்சலுகைகள் அவர்களுக்கு தரமுடியுமோ அவற்றைத்தான் தர முடியும் திருமணக் கடனைத் தந்து அதைத் திரும்பப் பெறவேண்டியிருக்கிறது. ரூ. 500 கடன் தருகிறார்கள் என்றால் அதை அறுபது தவணைகளில் திருப்பித் பெறுகிறார்கள். 1971–72-ல் மட்டும் ரூ. 2,11,000 கடனாக ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்குத் தருகிற எல்லா விதச் சலுகைகளையும் தருவதற்கில்லை. எவை, எவை தர இயலுமோ எல்லாம் தரப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற திருமணக் கடனைப்போல் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் திருமணக் கடன் வழங்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் பிறருக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும். செலவில்லாமல் திருமணங்களை முடித்து சிக்கனத்தைக் கடைப்பிப்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிற முறையைப் பேரவை உறுப்பினர்கள் கடைபிடிப்பார்களாக.

திரு. ஆ. பரந்தாமன் : எய்டெட் பள்ளிகள் அனைத்தையுமே அரசாங்கம் எற்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : அரசாங்கம் நடத்தும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் வழங்குவதைப் போல் எய்டெட் பள்ளிகளில் அவர்களுக்கு வழங்குவதில்லை என்று பரவாலக அதிருப்தி இருக்கிற காரணத்தினால் அந்த எய்டெட் பள்ளிகளை நடத்துகிற இயக்குநர்களே அந்த ஆசிரியர்களுக்கு திருமணக்கடன்கள் வழங்கவேண்டுமென்று அரசாங்கம் தாக்கீது அனுப்புமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கடன் வழங்குவதில் சிலபல முறைகளெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பள்ளிக்கூட ஆய்வாளர்கள் அல்லது மாவட்டக் கல்வி அலுவலாளர்கள் பரிசீலித்து வழங்கி வருகிறார்கள். 1971–72ல் மட்டும் ரூ. 2,11,000 திருமணக்கடனாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றும் இடர்பாடு இல்லை. அந்தந்த தனியார் பள்ளிகளை நடத்துகிறவர்கள் கடன் கொடுத்து உதவ முன்வருவார்களானால் அதற்கு ஆட்சேபனை இருக்க வழி இல்லை. அது வரவேற்கத்தக்க செயல். ஆனால் அவர்கள் தந்தே தீரவேண்டும் என்று வற்புறுத்த அரசால் இயலாது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு இந்தக் கடன் வசதி எப்போதிருந்து கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 23—1—1971 தேதிய ஆணைப்படி அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் வழங்கலாம் என்று தரப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. தனிக் கேள்வி போட்டால் எந்தத் தேதியில் இருந்து என்று கூற முடியும்.

Bridge across Paraliar.

*65 Q.—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is a proposal for the construction of a bridge across Paraliar at Anakkarai near Tiruvettar (Kumarankudi Village Panchayat) in Kanyakumari Distrcit ; and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Selection to Medical course.

*66 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether all the seats in the M.B.B.S course allotted for Burmese refugees and Malaysian and Singapore citizens of Indian Origin have been filled up ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether any complaint has been received by the Government?